# 'அம்பிடு' என்னும் சொல் பற்றி ஒரு குறிப்பு

இரத்தினமலர் கயிலைநாதன்

'அம்பிடு' என்னும் வினைச் சொல் யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கில் வழங்கக் காண்கிறோம். 'அகப்படு' என்னும் வினைச் சொல் இலக்கிய வழக்கில் வழங்கக் காண்கின்றோம். இவ்விரு சொற்களும் ஒரே பொருளைக் குறிப்பன.

சில சொற்கள் தோற்றத்திலே தொடர்பு உள்ளவை. 'அம்பிடு', 'அகப்படு' ஆகிய இரு சொற்களுக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா? இரு வடிவங்களினதும் ஒலிகளையும் பொருளையும் நோக்குமிடத்து இவற்றைத் தொடர்பற்ற தனித்தனித் தோற்றங்கள் எனக் கொள்வதைவிட ஒன்றில் இருந்து மற்றது தோன்றியது எனக் கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகிறது. இவ்வாறு ஒன்றில் இருந்து மற்றது தோன்றியது எனக் கொள்ளுமிடத்து ஏதோ ஒன்றைக் காலத்தால் முந்தியதாகக் கொள்ளுதல் வேண்டும். அது எது? அது எவ்வாறு? என ஆராய்வதே இக்குறிப்பின் நோக்கமாகும்.

இலக்கியத்திலே வரும் சொற்கள்தாம் காலத்தால் முந்தியவை என்னும் ஒரு நம்பிக்கையைப் பொதுவாக அறிஞர் பலரிடம் காண்கின்றோம். இதனை ஏற்றுக் கொண்டால் 'அகப்படு' என்பதையே காலத்தால் முந்தியதாகக் கொள்ளவேண்டும். ஆயின் அவ்வாறு இங்கு கொள்ள முடியவில்லை. 'அம்பிடு' என இன்று பேச்சு வழக்கில் உள்ள வடிவத்தின் ஒரு முந்திய தோற்றத்தையே காலத்தால் முற்பட்டது எனக் கொள்வது பொருத்தமானது போலத் தோன்றுகிறது.

'அகப்படு' என்பதுதான் 'அம்பிடு' என அமைந்தது எனக் கொள்ள முடியவில்லை. 'அம்பிடு' என்னும் வடிவம் ஒரு காலத்து 'அகம்படு' என்னும் வழக்கில் இருந்து அமைந்தது எனக்கொள்ளலாம் போலத் தோன்றுகிறது. இங்கு இறுதியில் உள்ள - படு என்பது - பிடு என அமைந்தமையைச் சற்றுப் புறக்கணித்து விடலாம். 'அகம்படு' என்பதில் ககரம் கெட்டது எனக் கொள்ளலாம். பின்னர் 'அம்படு' என நின்று 'அம்பிடு' எனத் திரிந்ததாகக் கொள்ளலாம். இவ்வாறு கொள்வதற்கு ஆதாரமாக இன்னும் ஒரு சான்று உண்டு. 'ஆப்பிடு' என்னும் வடிவமும் இதே பொருளில் யாழ்ப்பாணத்துத் தமிழில் ஆங்காங்கு வழங்கக் காண்கிறோம். 'ஆப்பிடு' என்னும் வடிவம் எவ்வாறு அமைந்தது என ஆராயுமிடத்து 'இழப்பீடு செய்கிற ஒலி' என்னும் அடிப்படையில் இதனை விளக்கலாம் போலத் தோன்றுகிறது. 'அகப்படு' என்பதில் ககரவொலி கெட அகரவொலி நீட்டம் பெற்றது. மகரவொற்று அடுத்து நிற்கும் பகர மயமாகிறது எனலாம். இதனடிப்படையில் 'அகம்படு' என்னும் வடிவம் ஒரு காலத்தில் அன்றாட வழக்கில் இருந்திருக்க வேண்டும் எனக்கொள்ளலாம்.

மகரவொற்று பகரவொற்ருக மாருத புணர்ச்சி நிலை ஒன்று ஏதோ ஒரு காலத்து வழக்கில் இருந்திருக்க வேண்டும் எனலாம்.

கல்வெட்டுக்களில் 'அம்பிடு', 'ஆப்பிடு', 'அகம்படு', 'அகப்படு' ஆகிய வழக்குகள் இடம் பெறுகின்றனவா என ஆராய்தல் பயனுடையது. கல்வெட்டிலே காணப்படும் தமிழ்மொழி பேச்சு வழக்கைப் பிரதிபலிக்கின்றது எனலாம். ஆயின் கல்வெட்டிலே காணப்படும் மொழி முழுவதுமே பேச்சு வழக்கு எனக் கொள்ளமுடியாது.

●●●

# சிந்தனை நிரந்தர வைப்பு நிதிக்கு

## கொடை உதவியோர் பட்டியல்

| | |
|---|---|
| மஹாராஜஸ்ரீ சண்முகநாதக் குருக்கள்<br>*மாவை ஆதீனகர்த்தா* | 5,000-00 |
| திரு. ரி. குமாரசாமி ஜவுளி நிறுவனம்<br>*42, 44, பஸார் வீதி, யாழ்ப்பாணம்.* | 5,000-00 |
| பொ. கந்தசாமி<br>*மஞ்சவனப்பதி, கொக்குவில்.* | 5,000-00 |
| பேராசிரியர். இ. கனகசுந்தரம், மருத்துவபீடம்<br>*யாழ் பல்கலைக்கழகம்* | 5,000-00 |
| சீமாட்டி நிறுவனம்<br>*மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.* | 2,500-00 |
| கணேசன் ஸ்ரோர்ஸ் | 1,001-00 |
| விமாகி நிறுவனம்<br>*27 / 3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.* | 1,001-00 |
| க. கதிரவேற்பிள்ளை<br>*நீதிபதி, கிளிநொச்சி.* | 1,000-00 |
| முருகன் உபயம் | 500-00 |
| செ. அஞ்சலாதேவி மூலம் பரந்தன், கிளிநொச்சி,<br>சாவகச்சேரி அன்பர்கள் அளித்த நன்கொடை | 2,581-00 |
| சி. சின்னத்துரை<br>*இணுவில்* | 5,000-00 |
| எஸ். சிவகுமாரன்<br>*ஸ்ரீ ராம் ரெக்ஸ்ரயில்ஸ்* | 5,000-00 |
| நா. வ. கந்தையா அன் சன்ஸ் | 1,001-00 |
| | 39,584-00 |

## சந்தாப் படிவம்

நிர்வாக ஆசிரியர்,
**சிந்தனை,**
நூலகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
இலங்கை.

சிந்தனை, மூன்று இதழ்களுக்கான சந்தாப்பணம் அனுப்பியுள்ளேன். இத்துடன் காசுக்கட்டளை / காசோலை / தபாற்கட்டளை / பணம் அனுப்பிவைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா | 60-00 |
| இந்தியா (இந்திய ரூ.) | ரூபா | 60-00 |
| வேறு நாடுகள் | £ 6-00 $ 12-00 | |

(தபாற்செலவு உட்பட)

பெயர்.......................................................................................

முகவரி.....................................................................................

நாடு.....................................................

திகதி...................................

கையொப்பம்.............................................

## Subscription Form

Managing Editor,
**Cintanai**,
The Library,
University,
Thirunelvely,
Sri Lanka.

Please send me 3 issues of Cintanai to my address given below. I enclose a Cheque / Bankers order / M. O. / P. O. in your name for Sri Lanka Rs. 60/-, India Rs. (Ind. Rs.) 60/-, other countries £ 6-00 / $ 12-00 per year. (Postage included)

**Name:**.......................................................................................

**Address:**....................................................................................

**Country:**.....................................................

**Date:**...................................

**Signature:**.............................................

# சிந்தனை

தொகுதி I. (புதியதொடர்) கார்த்திகை, 1983 இதழ் III.

## உள்ளுறை

இந்திய இசை, சமய, இலக்கிய மரபுகளில்
ஜயதேவர் — ஓர்ஆய்வு 1
— வி. சிவசாமி

இலங்கையில் உபஉணவுப் பயிர்களுக்காக
வணிகவங்கிகளால் வழங்கப்பட்ட கடன்
வசதிகள் பற்றிய ஓர்ஆய்வு, 1965 — 1980 14
— ந. பேரின்பநாதன்

பௌத்தத்திற்கு முந்திய
ஈழத்து இந்துமதம் 38
— சி. க. சிற்றம்பலம்

யாழ்ப்பாண நகர நிலப் பயன்பாடு 56
— கே. கே. ஆறுமுகம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில்
கிடைத்த நாணயங்கள் 70
— செ. கிருஷ்ணராசா

இலங்கையில் கல்வி நிருவாகத்தின்
பன்முகப்படுத்தலுக்கான வழிமுறைகள் 85
— தி. வேலாயுதம்

ஈழத்தில் 'இந்து இலக்கியங்கள்
(பத்தொன்பதாம் நூற்றுண்டுவரை) 93
— கலையரசி சின்னையா

தமிழர் வழிபாட்டில் செவ்வேளும் திருமாலும் 108
— அ. சண்முகதாஸ்

யாழ்ப்பாணப் பகுதியில் மீன்பிடித்
தொழில் அபிவிருத்தி 123
— கா. ரூபாமூர்த்தி

அம்பிடு, என்னும் சொல்பற்றி
ஒரு குறிப்பு 138
— இரத்தினமலர் கயிலைநாதன்